## IN THE COURT OF SUB COURT, USILAMPATTI

## O.S. No.164 / 2023

## Dated:12.06.2026

Name : சந்திரபாண்டி (DW2)

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

வழக்கு சொத்துக்கள் பற்றி சுமார் 25 ஆண்டுகளாக தெரியும். வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் உறவுமுறை குறித்து வழக்கில் சொல்லப்பட்டது சரிதான். வழக்கு சொத்துக்கள் ஆதியில் மாயாண்டித்தேவருக்கு பாத்தியப்பட்டது. மாயாண்டித்தேவருக்கு 3 ஆண்மக்கள் மற்றும் 3 பெண் மக்கள் என்றால் சரிதான். 12.03.1990ல் வழக்கு சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை பத்திரம் போட்டப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் எந்தெந்த சொத்துக்கள் யார் யாருக்கு ஒதுக்கப்பட்டது என்று தெரியும். மாயாண்டித்தேவர் மகன் பெரியகருப்பனுக்கு பாகப்பிரிவினை ஆவணத்தில் டி செட்டியூல் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். 21.07.1999ல் பெரியகருப்பன் அவரது பாகத்தின் மூலம் கிடைத்த சொத்துக்குறித்து உயில் சாசணம் எழுதிய விவரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பின்பு தான் தெரியும். மேற்படி உயில் சாசணத்தின் உண்மை தன்மை குறித்து எதிரிடை கோரிக்கை எதுவும் போடவில்லை என்றால் சரிதான். உயில் சாசணம் யாருக்கு ஆதரவாக எழுதப்பட்டது என்றால் எனது தகப்பனாருடன் பிறந்த 3 சகோதரிகளுக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது. எனது தகப்பனாரும், பெரியகருப்பனும் சகோதரர்கள் என்றால் சரிதான். பெரியகருப்பன் 18.11.1999ல் காலமானார் என்றால் சரிதான். பெரியகருப்பன் காலமான பிறகு உயில் சாசணத்தின் கண்ட நபர்கள் வழக்கு சொத்தை பொறுத்து உரிமைமூலம் அடைந்தார்கள் என்றால் உயில் எழுதி கொடுத்தது எங்களுக்கு தெரியாது. உயில் சாசணத்தில் கண்ட நபர்களின் பெயர்களில் பட்டா பெயர் மாற்றம் ஏற்பட்ட விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் பிறகு தெரிந்துகொண்டேன். பெரியகருப்பனுடன் பிறந்த சகோதரிகள் அவர்களுக்குள் உயில் சாசணம் சம்மந்தப்பட்ட சொத்துக்களை பொறுத்து தானசெட்டில்மெண்ட் செய்து கொண்டனர் என்றால் சரிதான். மேற்படி தானசெட்டில்மெண்ட் பொறுத்து எதிர்கோரிக்கை எதுவும் எதிர்வழக்குரையில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். ராசு (எ) ஒய்யாத்தேவர் எனது பெரியப்பா. அவர் இந்த வழக்கு சொத்தை குறித்து 27.09.2011ல் அவரது மகளுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த விவரம்

தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். மாயாண்டித்தேவர் 27.09.2011ல் எனது பெயரில் ஒரு தானப்பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி தானப்பத்திரம் வாதிகளின் உரிமையை மோசம் செய்வதற்காக பொய்யாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. மாயாண்டித்தேவர் அவருக்கு உரிமையில்லாமல் எனது பெயரில் தானப்பத்திரம் எழுதிக்கொடுத்தது செல்லாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7, 8 அடங்கல் ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு வாங்கப்பட்டது என்றால் சரிதான். வழக்கிற்கு பின்னிட்டு வாங்கப்பட்ட ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 27.09.2011லிருந்து பி.வா.சா.ஆ.7, 8 ஏற்பட்ட வரைக்கும் தாவா சொத்து சம்மந்தமாக என் பெயரில் ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். வாதிகளின் பங்கினை மோசம் செய்ய பொய்யாக ஆவணங்கள் உற்பத்தி செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரிய்லல.

ம.வி.இல்லை.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

L MAHESWARI

Digitally signed by L MAHESWARI
Date: 2026.06.12 06:52:35 +0530

Sub Judge,
Usilampatti.